# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**Sessions Case No.58/2013**

Deposition of witness for : PW-12

Name : ராஜேந்திரன்

Father's / Husband Name : வையாபுரி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law by Thiru.M.Senthilkumar, Superintendent of this court on the day of 25.11.2025 Evidence Recorded from P.M to P.M

**6, 9, 10 ஆகிய எதிரிகள் BNSS sec 355 கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 14ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். மற்ற எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை:–**

அரசு தரப்பில் கு.வி.மு.ச 311ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு இறந்துபோன திரு.சோமன்ராஜன் என்பவர் காவல் ஆய்வாளராக அஸ்தம்பட்டி காவல்நிலையத்தில் பணிபுரிந்த போது மேற்படி வழக்கில் இரண்டு எதிரிகளை கைது செய்து புலன்விசாரணை முடித்து

குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் மேற்படி சோமன்ராஜன் என்பவர் கடந்த 04.09.2025 தேதியில் இறந்துவிட்டபடியால் இந்த வழக்கில் முதல்நிலை புலன்விசாரணை அதிகாரியான நான் அவருடைய கையெழுத்து எனக்கு மிகவும் பரிச்சயம் என்பதால் கோப்புகளின் அடிப்படையில் அவருடைய புலன்விசாரணை பகுதியை சாட்சியம் அளிக்க கனம் கோர்ட்டார் அவர்களின் அனுமதியுடன் சாட்சியம் அளிக்கிறேன்.

திரு.காவல் ஆய்வாளர் சோமன்ராஜன் என்பவர் அஸ்தம்பட்டி காவல்நிலைய குற்ற எண். 142/11 வழக்கு கோப்புகளை 14.02.2011ம் தேதி வழக்கு கோப்புகளை பார்வையிட்டுள்ளார். அதன் அடிப்படையில் 10.02.2011ம் தேதி பென்னாகரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்த பல்சர் சந்துரு(எ) சந்திரகாந் என்பவரை போலீஸ் காவலில் எடுக்க 15.02.2011ம் தேதி நீதித்துறை நடுவர் எண்.3, சேலம் அவர்களிடம் பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். அதன் அடிப்படையில் 17.02.2011ம் தேதி வழக்கின் எதிரி பல்சர் சந்துரு (எ) சந்திரகாந் என்பவரை 13.30 மணிக்கு போலீஸ் காவலில் எடுத்து 14.30 மணிக்கு காவல்நிலையம் கொண்டுவந்து சாட்சிகள் மனோகரன், ரமேஷ் ஆகியவர்கள் முன்பாக பல்சர் சந்துருவை விசாரிக்க அவர் தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்பாக பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 16.30 மணிக்கு எதிரி மற்றும் சாட்சிகளுடன் சென்று அஸ்தம்பட்டி வாட்டர் டேங் பின்புறம் முட்புதரில் மறைத்து வைத்திருந்து சுமார் 37 செ.மீ. நீளமுள்ள வீச்சருவாளை எதிரி எடுத்து ஆஜர் செய்ய அதனை மேற்படி சாட்சிகள்

முன்பாக மகஜரில் கைப்பற்றியுள்ளார். மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.15 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வீச்சருவாள் சா.பொ.17 வரிசைகள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டவை தான். அந்த எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.46** அன்றே எதிரியை காவல்நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். 18.02.2011ம் தேதி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த படிவம் 91 அ.த.சா.ஆ.47. 21.02.2011ம் தேதி முதல்நிலை காவலர் 561 முருகேசன் என்பவர் மூலம் மேற்படி கைப்பற்றப்பட்ட சொத்துக்களை ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்ப நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பியுள்ளார். 23.02.2011ம் தேதி மேற்படி சொத்துக்களை நீதிமன்ற உத்தரவின் பேரில் வட்டார தடய அறிவியல் துறை சேலம் அவர்களிடம் ஒப்புவித்துள்ளார். 25.02.2011ம் தேதி எதிரி ராதாகிருஷ்ணன் என்பவரை காலை 9.30 மணிக்கு சேலம் டவுன் ரயில்வேஸ்டேஷன் மேம்பாலம் மரவனேரி படிக்கட்டு பக்கம் வைத்து கைது செய்து 9.45 மணிக்கு சாட்சிகள் மனோகரன், ரமேஷ் ஆகியோர்கள் முன்பாக விசாரணை செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து அதே சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். பிறகு அன்றைய தினமே 11.30 மணிக்கு எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரி மற்றும் சாட்சிகளுடன் அஸ்தம்பட்டி வாட்டர்டேங் பின்புறமுள்ள முட்புதர் சென்று அங்கு எதிரி ராதாகிருஷ்ணன் என்பவர் எடுத்து ஆஜர் செய்த 120 செ.மீ. நீளமுள்ள உருட்டுக்கட்டை ஒன்றை மேற்படி சாட்சிகள் முன்பாக

மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.16 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது தான். மேற்படி உருட்டுக்கட்டை சா.பொ.18 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது தான். எதிரி ராதாகிருஷ்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.48 ஆகும். எதிரி மற்றும் சொத்துக்களுடன் 12.45 மணிக்கு நிலையம் கொண்டு வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த படிவம் 91 **அ.த.சா.ஆ.49** ஆகும். வட்டார தடய அறிவியல் துறையிலிருந்து பெறப்பட்ட பகுப்பாய்வு அறிக்கை **அ.த.சா.ஆ.50** (இரண்டு எண்ணிக்கை) ஆகும். குருதி அறிக்கை (இரண்டு எண்ணிக்கை) அ.த.சா.ஆ.51 ஆகும். 17.02.2011, 25.02.2011 ஆகிய தேதிகளில் சாட்சிகள் மனோகரன், கிராமநிர்வாக அலுவலர் ரமேஷ், கிராம நிர்வாக உதவியாளர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 17.03.2011 ம் தேதி பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று டாக்டர் பன்னீர் செல்வம் மற்றும் சாட்சிகள் தலைமை காவலர் 1421 திரு.சுகுமாரன், 1388 திரு.சரவணன் மற்றும் முதல்நிலை காவலர் 521, திரு.முருகேசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 18.03.2011 ம் தேதி மருத்துவர் மனோகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 28.03.2011 ம் தேதி சாட்சிகள் நிர்மலாபாய் மற்றும் மாணிக்கம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிறகு புலன்விசாரணை முடித்து வழக்கு தொடர்புதுறை கூடுதல் இயக்குநர் அவர்களின் கருத்துரை பெற்று எதிரிகள் மீது பிரிவு 148, 302 உ/இ 149

மற்றும் 324 உ/இ 149 இ.தச பிரிவுகளின் கீழ் 29.03.2011ம்தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>8 முதல் 10 மற்றும் 14 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கின் முதல்நிலை விசாரணையை நான் மேற்கொண்டு தொடர் விசாரணைக்காக சோமன்ராஜன் வசம் ஆவணங்களை ஒப்படைத்தேன். அ.சா.ஆ.46, அ.சா.ஆ.48, அ.சா.ஆ.15, 16 ஆகியவற்றில் கண்டுள்ள கையெழுத்துகளில் காவல் ஆய்வாளர் சோமன்ராஜன் என்பவருக்கு உரியது என்றால் மேற்படி ஆவணங்களில் கண்டுள்ள கையொப்பங்கள் மட்டும் மேற்படி காவல் ஆய்வாளர் சோமன்ராஜனுக்கு உரியது. மேற்படி ஆவணங்களில் கண்டுள்ள வாக்குமூலங்களை ஆய்வாளர் விசாரித்து சொல்லசொல்ல தலைமை காவலர் எழுதுவது வழக்கம். அ.த.சா.ஆ.46 முதல் இரண்டு பக்கங்கள் மற்றும் அ.த.சா.ஆ. 48 முதல் மூன்று பக்கங்களில் யாருடைய கையொப்பமும் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் வாக்குமூலங்கள் அல்லது மகஜர் எழுதப்பட்டு அதன் முடிவுரை பக்கத்தில் மட்டுமே எப்பொழுதும் கையொப்பம் செய்யப்படும்.அவ்வாறு சோமன்ராஜன் செய்கை குறித்து நீங்கள் ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகள் மட்டுமே சாட்சியம் அளிக்க முடியுமே தவிர கருத்துரை எதுவும் வழங்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. நானும் சோமன்ராஜனும் ஒருபோதும் ஒன்றாக ஒரே இடத்தில் பணிபுரிந்திருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். சொல்வது போது மேற்படி சோமன்ராஜன் அவர்கள் சொன்னநேரத்தில், சொன்னஇடத்தில் வைத்து சொன்ன எதிரியை கைது செய்திருக்கவில்லை என்றாலும் அவரிடமிருந்து சொன்னவாறு ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவு

செய்திருக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் சொன்ன எதிரிகள் சொன்னவாறு சொத்துக்கள் எதையும் ஆஜர்படுத்தியிருக்கவில்லை என்றாலும், அதனை அவர் சொன்னவாறு கைப்பற்றிருக்கவில்லை என்றாலும், அனைத்து ஆணங்களும் பின்னிட்டு நிலையத்தில் வைத்து அவரால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அ.த.சா.ஆ 50, 51 நேரடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி அ.சா.ஆ.50, அ.த.சா.ஆ.51 ல் புலன்விசாரணை அதிகாரிக்கு நகல் ஏதாவது அனுப்பப்பட்டதாக குறிப்பு காணப்படுகிறதா என்றால் இல்லை. அ.த.சா.ஆ.50 ல் 03.03.2011 தேதியிட்டது என்றாலும், அ.த.சா.ஆ.50 ல் பக்கம் 349, 351, 03.03.2011 தேதியிட்டது என்றாலும், 353 பக்கமிட்டது 21.02.2011 ம் தேதியிட்டது என்றாலும் அ.சா.ஆ.51 11.04.2011 தேதியிட்டது என்றாலும் சரிதான். இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை 29.03.2011 ம்தேதியில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ.50, 51 19.04.2011 ல் நீதிமன்றத்தால் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அ.த.சா.ஆ.50, 51 பரிசீலனை செய்யாமல் காவல் ஆய்வாளர் சோமன்ராஜன் குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.50, அ.த.சா.ஆ.51 ஆவணங்களை புலன்விசாரணை நிமித்தம் நீதிமன்றத்தில் சான்றிட்ட நகல் பெறப்பட்டதற்கான குறிப்புகள் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் தடய அறிவியல் துறையிலிருந்து போலிஸ் பைல் காப்பி என்று காவல்நிலையத்திற்கு அனுப்பியுள்ளார்கள். அந்த ஆவணத்திலும் 11.04.2011 ம் தேதி தான் குறிப்பிடப்பட்டுள்ளது. 28.03.2011 அன்றே தடய

அறிவியல் நிபுணரிடம் சோமன்ராஜன் வாக்குமூலம் பெற்றுள்ளார். மேற்படி ஆய்வாளர் சோமன்ராஜன் அவர்கள் முறையாக விசாரித்து உண்மைத்தன்மையை தெரிந்து கொள்ளாமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

என் முதல்விசாரணையில் கண்டுள்ள சங்கதிகள் தவிர வேறு ஏதாவது புலன்விசாரணை நிமித்தமாக செயல்களை காவல் ஆய்வாளர் சோமன்ராஜன் புரிந்துள்ளாரா என்றால் இல்லை. மேற்படி ஆய்வாளர் சோமன்ராஜன் செல்போன்களில் அழைப்புகள் குறித்த விவரங்களையும், செல்போன் நம்பரையும், நம்பர்கள் குறித்த விவரங்களையும் சேகரித்துள்ளாரா என்று சொன்னால் இல்லை. மேற்படி ஆய்வாளர் சோமன்ராஜன் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்த T.N.1069563 டாட்டா இண்டிகா, T.N.04L4027 என்ற கோண்டா காரின் உரிமையாளர் மற்றும் அதன் பதிவு புத்தங்களையும், பதிவு புத்தங்கள் பற்றிய விவரங்களையும் சேகரித்தாரா என்றால் இல்லை. சோமன்ராஜன் அவர்கள் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சேலத்தில் வைத்து 17.03.2011 ம் தேதி விசாரித்துள்ளார். குருதிஅறிக்கை தடய அறிவியல் துறையிலிருந்து 11.04.2011 தேதியிடப்பட்டு நீதிமன்றத்தால் அதே தேதியில் பெறப்பட்டுள்ளது. 16.03.2011 ம் தேதி அவர் இறந்துபோன செந்தில்குமார் அவர்களின் பிரேத பரிசோதனை அறிக்கையில் இறுதி கருத்துரை அ.த.சாஆ.25 ல் விஸ்ரா ரிப்போட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். காவல் ஆய்வாளர்

சோமன்ராஜன் அவர்கள் உங்களால் தயார் செய்து வைக்கப்பட்டிருந்த கோப்புகளின் அடிப்படையில் அதன் உண்மைத் தன்மையை தெரிந்து கொள்ளாமலும், எந்தவிதமான மேல்விசாரணையும் மேற்கொள்ளாமலும் தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த விதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இறுதிஅறிக்கை தாக்கல் செய்தது தவிர மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.